**செய்தி வெளியீடு எண்:514** **நாள்: 07.08.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (7.8.2017) 3வது தேசிய கைத்தறி தின விழாவில் ஆற்றிய உரை**

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீரும் சிறப்புமாக நடந்து கொண்டிருக்கின்ற மூன்றாவது தேசிய கைத்தறி தினவிழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இச்சீர்மிகு விழாவில் தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு கைத்தறி மற்றும்
துணிநூல் துறை அமைச்சர்
திரு.**ஓ.எஸ்.மணியன்** அவர்களே!
சிறப்புரையாற்றிய
மாண்புமிகு மீன்வளம், நிதி,
பணியாளர் மற்றும்
நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர்
திரு.**ஜெயக்குமார்** அவர்களே!
வரவேற்புரையாற்றிய தலைமைச் செயலாளர்
முனைவர் **கிரிஜா வைத்தியநாதன்** அவர்களே!
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே
முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே
நன்றியுரையாற்றவுள்ள கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு
முதன்மைச் செயலாளர், திரு.**க.பணீந்திர ரெட்டி** அவர்களே!
போற்றுதலுக்குரிய நெசவாள பெருங்குடி மக்களே,
அரசு அலுவலர்களே,
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,
வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

மகாத்மா காந்திஜி அவர்களையும்
சுதந்திர போராட்ட வரலாற்றையும்
சுதந்திரப் போராளிகளையும் இன்றைக்கும்
நமக்கு நினைவூட்டிக் கொண்டிருப்பது..
இந்தக் கைத்தறிதான்.

மாண்புமிகு புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள்
கைத்தறி ஆடையை இளம் வயதிலேயே
மிகவும் விரும்பி உடுத்தி வந்தார்கள்.
எளிமைக்கும், உழைப்பிற்கும்,
தேசப்பற்றுக்கும் அடையாளமாக,
திகழக்கூடியது கைத்தறியாகும்.

சுதந்திர போராட்டத்தின் போது,
நாடு முழுக்க மகாத்மாவின் சீரிய தலைமையில்
அந்நிய துணி மறுப்பு இயக்கம் தீவிரமாய்
நடந்து கொண்டிருந்தது.

அக்கால நாடகக் கலைஞர்கள்
பலர் ‘காந்திஜியின்’ அகிம்சை
போராட்டத்திற்கு வலுசேர்க்கும் விதமாக
‘நாடகங்களை’ நடத்திக் கொண்டிருந்தனர்.
நாடகங்களில் ‘வெள்ளையர்’ எதிர்ப்புப்
பாடல்களை பாடி நடித்தனர்.
மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருக்கு
அந்த வயதிலேயே சுதந்திரப் போராட்டம்
பற்றிய உணர்வு ஏற்பட்டிருந்தது.
தன்னை காங்கிரஸ்
தொண்டனாய் மாற்றிக் கொண்டார்.
தூய கதர் சட்டை, வேட்டியை அணிந்து,
‘தேச பக்தனாக’த் திகழ்ந்தார்.
1930ஆம் ஆண்டில் பாய்ஸ் கம்பெனி,
‘கதர்பக்தி’ என்ற நாடகத்தை
சென்னை ஒற்றை வாடைத்
தியேட்டரில் நடத்தியது.
அந்த நாடகத்தில் ‘தேசபக்தி’
சாமியாராய் அவர் நடித்தார்.
அவர் ‘தேசபக்தி’ சொற்பொழிவாற்றும் போது
‘மக்கள் உணர்ச்சி வசப்பட்டு’ ஆரவாரித்தனர்.
சிலர் ‘காந்திஜிக்கு ஜே’ போட்டனர்.

தாய்நாட்டின் மீது பற்றும், பாசமும்
கொண்ட இந்தியர்கள் நிச்சயம்
கைத்தறியை ஆதரிப்பார்கள்.
கைத்தறி ஆடையை அணிவார்கள்.
கைத்தறித் தொழிலை ஊக்குவிப்பார்கள்,
கைத்தறி ஆடையை அணிந்து கொண்டால்,
உடலுக்கும் மனதிற்கும்
ஒரு உற்சாகம் ஏற்படுகிறது.
நானும் ஒரு இந்தியன் என்கிற உணர்வு
தானாகவே ஏற்படுகிறது.
பிரிட்டிஷ் பொருள்களுக்கு எதிராக உள்நாட்டு
பொருள்களை ஆதரிப்பது என்ற நோக்கத்துடன்
1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் நாள்
கொல்கத்தாவில் சுதேசி போராட்டம்
தொடங்கியது. அதை நினைவுகூரும் வகையில்
2015ம் ஆண்டு முதல் ஆகஸ்ட் 7ம் தேதி
தேசிய கைத்தறி தினமாக
கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆகஸ்ட் 15–ல் நடைபெறும்
சுதந்திர தினத்திற்கு இந்த விழா ஒரு
முன்னோட்டமாக, முன்மாதிரி விழாவாக
நடைபெறுகிறது.

தேசிய கைத்தறி தினம்
அறிவிக்கப்பட்டதன் மூலம்
உலகளாவிய சந்தைக்கு பன்னாட்டு தரத்தில்
கைத்தறி பொருட்கள் உற்பத்தி செய்வதை
ஊக்குவிக்க முடியும்.
தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக,
கிராமப்புற மக்களுக்கு, கைத்தறித்தொழில்
பெருமளவில் வேலைவாய்ப்பினை
வழங்கி வருகிறது.
இத்தொழிலில் ஈடுபட்டுள்ள
சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமான
கைத்தறி நெசவாளர்களின் நலன் காத்திட

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்கள்.
அதே போன்று, விசைத்தறி நெசவாளர்களின்
நலனுக்காகவும் பல்வேறு நடவடிக்கைகளை
அம்மாவின் வழியில் செயல்பட்டு வரும்
இந்த அரசு எடுத்து வருகிறது.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்
தொடர்ந்து செயல்படத்
தேவையான காசுக்கடன் வசதி
மற்றும் நடைமுறை மூலதனம்
ஆகியவை கிடைத்திடும் வகையிலான
நடவடிக்கைகளை
மாண்புமிகு அம்மா அவர்களின்
வழியில் ஆட்சி நடத்தும் அம்மாவின் அரசு எடுத்து வருகிறது.
கைத்தறி நெசவாளர்களுக்கு
ஆண்டு முழுவதும் தொடர்ந்து
வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும்,
கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில்
வாழும் ஏழை எளிய மக்கள்
பொங்கல் பண்டிகையின் போது,
தமிழ்நாடு அரசின் சார்பில் வேட்டி சேலை
பெற்றிடும் வகையிலும்,
விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்
சிறப்பான முறையில்
செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்மூலம் கூட்டுறவு சங்கங்களில் உள்ள
11 ஆயிரம் கைத்தறி நெசவாளர்களுக்கும்,
54 ஆயிரம் விசைத்தறி தொழிலாளர்களுக்கும்
வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.

வரும் ஆண்டு பொங்கலுக்கு 3 கோடியே
36 இலட்சம் பயனாளிகளுக்கு விலையில்லா
வேட்டி சேலை வழங்க இருக்கிறோம்.
அரசுத் திட்டங்களான
விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்,

விலையில்லா சீருடை வழங்கும் திட்டம்,
மற்றும் முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு
விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்
ஆகியவற்றைச் செயல்படுத்தும்
முகமை நிறுவனமாக
'கோ–ஆப்டெக்ஸ்' செயல்பட்டு வருகிறது.
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
தொலைநோக்குத் திட்டத்தால்..
இன்றைக்கு 'கோ–ஆப்டெக்ஸ்'
அரசுக்கு மட்டுமல்லாமல், தனியாருக்கும்,
பொது மக்களுக்கும் செய்து வரும் விற்பனை,
மெச்சக்கூடிய அளவில் உள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
கடந்த தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி,
"கைத்தறி நெசவாளர்களுக்கு இருமாதங்களுக்கு
கட்டணமில்லாமல் 100 யூனிட் அளவுக்கு
வழங்கப்பட்டு வந்த மின்சாரம்
200 யூனிட்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது.
கைத்தறித்துறைக்கும்,
நெசவாளர்களுக்கும் பல்வேறு
முன்னோடித் திட்டங்களை செயல்படுத்திய
காரணத்தினால் தான்
1,156 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
சங்கங்களில் 964 சங்கங்கள் லாபத்தில்
இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்திலும்,
தொழில் உற்பத்தியிலும் ஜவுளித் தொழில்,
அதிலும் குறிப்பாக கைத்தறி,
முக்கிய பங்கு வகிக்கிறது.

கைத்தறித்துறையை மேம்படுத்தவும்,
நெசவாளர்கள் வாழ்வு வளம் பெறவும்

பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா
அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது.

நெசவாளர்கள் தங்கள் இல்லங்களில் வசதியாக கைத்தறிகள் மூலம் நெசவுத் தொழில் செய்யும் வகையில் 365 சதுர அடி பரப்பளவு கொண்ட சூரிய சக்தியுடன் கூடிய 10,000 பசுமை வீடுகளை மாண்புமிகு அம்மா அவர்கள் கட்டிக் கொடுத்தார்கள்.

கைத்தறி நெசவாளர்களின் வேலைப்பளுவை குறைக்கவும், உற்பத்தியை அதிகரிக்கவும், அதன் மூலம் அவர்கள் கூடுதல் வருவாய் ஈட்டவும் அரை குதிரைத்திறன் மோட்டார் பொருத்தப்பட்ட பெடல்தறிகள் வழங்கப்படுகின்றன.

மின் மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரங்கள் நெசவாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மின்சார பாவு சுற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
கைத்தறி விற்பனைக்கு வழங்கப்படும் தள்ளுபடி மானிய நிதியானது 2017–2018ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் 867 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பயனடைந்து வருகின்றன.

நெசவாளர்களின் உடல் நலத்திலும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதிக அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது. நெசவாளர்கள் மற்றும் நெசவினை சார்ந்த உபதொழில் பணியாளர்களுக்கு மருத்துவக்காப்பீட்டுத் திட்டம் 2004ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
நெசவாளர்கள் முத்ரா திட்டத்தின் மூலம்

இதுவரை 18 ஆயிரத்து
340 நெசவாளர்களுக்கு கடன் அட்டைகள்
வழங்கப்பட்டுள்ளன.
மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த ஆட்சியில்
திருச்சி, திருவண்ணாமலை, மற்றும்
தூத்துக்குடியில் கோ ஆப்டெக்ஸ் நிறுவனம்
2 கோடி ரூபாயில் நவீனமயமாக்க
நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
தொழில் நுட்ப ஜவுளி பிரிவிற்கு
சிறப்பு கவனம் செலுத்த
25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் விருப்பத்திற்கு ஏற்ப
அஹிம்சா ரக பட்டுகள் கோஆப்டெக்சில்
அறிமுகப்படுத்தப்படும்.
இயற்கை சாயமிடப்பட்ட பருத்தி சேலை ரகங்கள்,
திண்டுக்கல், கோவை வதம்பசேரி,
திருச்சி மணமேடு ஆகிய பகுதிகளில்
உற்பத்தி செய்ய நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது.
இப்படி கைத்தறி மற்றும்
விசைத்தறி தொழிலாளர்களும்,
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்
அரசும், அம்மா அவர்களின் வழியில் வந்த அரசும்
தொடர்ந்து பல திட்டங்களை செயல்படுத்தி..
அவர்களின் வாழ்க்கையை
மேம்படுத்தி வருகின்றன.

‘‘கைத்தறி நெசவாளர்கள்
அரசின் திட்டங்களை பயன்படுத்தி தங்களது
வாழ்வில் வளம் பெற வேண்டும்” என்று
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்கள் வாழ்த்தினார்கள்.
அதன்படி நீங்கள் அனைவரும் அரசு திட்டங்களை
முழுமையாக பயன்படுத்தி, எல்லா நலன்களும்,
வளங்களும் பெற வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுக்கும்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா
அவர்களுக்கும் தொழிலாளர் பெருமக்கள்தான்
அன்பு குழந்தைகளாக இருந்தீர்கள்.

அதிலும், உண்ண உணவளிக்கும்
விவசாயிகள் மீதும்,

உடுக்க உடையளிக்கும் நெசவாளர்கள் மீதும்
நமது இரண்டு மகத்தான தலைவர்களுக்கும்
அக்கறை இருந்தது.

படிக்கும் நூல் மனதுக்கு இதம் அளிக்கிறது,
பருத்தி நூல் உடலுக்கு இதம்அளிக்கிறது,
படிக்கும் நூல் அறிவுக்கு அழகு சேர்க்கிறது,
பருத்தி நூல் உடலுக்கு அழகு சேர்க்கிறது.

எழுத்தாளர்களும் நெசவாளர்களும்
படைப்பாளர்கள்தான்.
எழுத்தாளர்கள் வார்த்தைகளை கோர்க்கின்றார்கள்.
நெசவாளர்கள் இழைகளைக் கோர்க்கின்றார்கள்.
எழுத்தாளர்கள் இந்த நாட்டுக்கு
எத்தனை முக்கியமோ – அதைப்போன்று
நெசவாளர்கள் இந்த நாட்டுக்கு
மிக மிக முக்கியம்.

அதனால் தான் நெசவாளர்களை ஊக்குவிக்கும்
விதமாக, அதிக உற்பத்தியும், விற்பனையும்
பெற்றுத்தந்த மாநில அளவில் சிறந்த கைத்தறி
நெசவாளருக்கு ஒரு இலட்சம் ரூபாய்
ரொக்கப்பரிசும், கைத்தறியில் பருத்தி மற்றும்
பட்டு இரகங்களில் சிறந்த வடிவமைப்புகளை
உருவாக்கும் திறன்மிகு கைத்தறி
நெசவாளர்களுக்கு பரிசுகளும்,

தமிழ்நாட்டிலுள்ள சிறந்த கைத்தறி
ஏற்றுமதியாளர்களுக்கு கேடயம் மற்றும்
சான்றிதழ் வழங்கும் திட்டங்களும்
அம்மா வழியில் நடைபெறும் அரசால்
செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்விழாவில் 2017–2018 ஆம் ஆண்டிற்கான
மாநில அளவிலான சிறந்த நெசவாளர் விருதின்
வெகுமதியாக ஒரு லட்சம் ரூபாய், சான்றிதழ்
மற்றும் பொன்னாடை, திருபுவனம் பட்டு கைத்தறி
நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்
எம்.ஆர்.இராஜசேகரன் அவர்களுக்கும்,
சிறந்த வடிவமைப்பு மற்றும் தரத்துடன் கூடிய
கைத்தறி இரகங்களை நெசவு செய்தமைக்காக
மொத்தம் 60 நெசவாளர்களுக்கு
ஆறு லட்சம் ரூபாய் அளவிற்கு
திறன்மிகு கைத்தறி நெசவாளர் விருதுகள்
மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதில் பெருமிதம்
கொள்கிறேன்.

இதேபோல ஒருங்கிணைந்த புதிய ஜவுளிக் கொள்கை உருவாக்கப்படும் என்று
இந்த நேரத்திலே தெரிவித்து
நெசவுத் தொழிலுக்காக
மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு
ஏராளமான திட்டங்களை
கொண்டு வந்திருக்கிறது என்று தெரிவித்து,
மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில்
நடப்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து
பல திட்டங்களால் நெசவாளர்களின்
வாழ்வாதாரத்தை என்றும் முன்னேற்றும் என்று
இந்த நேரத்திலே தெரிவித்து

இங்கு நடக்கும் கண்காட்சியில் 42 அரங்குகள்
சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது.
கண்கவரும் வண்ணம் அசல் பட்டுசேலைகள்,

மென் பட்டுசேலைகள், பருத்தி சேலைகள்,
ஆர்கானிக் பருத்தி சேலைகள், வெண்பட்டு
வேட்டிகள், கைலிகள், படுக்கை விரிப்புகள்,
திரைச்சீலைகள் போன்றவை நியாயமான
விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது,
பாராட்டுக்குரியது.
இந்த இனிய விழாவை சிறப்பாக
ஏற்பாடு செய்த அனைவருக்கும் எனது
பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இந்த சிறப்புமிக்க விழாவின் மூலம்
உங்களை எல்லாம் சந்திக்கும்
வாய்ப்பு கிடைத்தமைக்கு
மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
கைத்தறி உடுத்துவோம்!
காந்திய வழியில் நடப்போம்!
கைத்தறி தொழிலாளர்களுக்கு உதவுவோம்!
என்று கூறி விடைபெறுகிறேன்.
நன்றி!
வணக்கம்!

அதே நேரத்தில் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற கைத்தறி துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களுக்கும், கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கும், வருகை தந்துள்ள அத்தனை நல்ல உள்ளங்களுக்கும்
நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்
நன்றி வணக்கம்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**